

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.11.2025 அன்று திறக்கப்படவுள்ள கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில், புதுப்பிக்கப்பட்ட பெரியார் நகர் நூலகம் மற்றும் முதல்வர் படைப்பகத்தை நேற்று (11.11.2025) அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு, முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கோ.பிரகாஷ், ஜெ.குமரகுருபரன், பா.கணேசன், எச்.ஆர்.கௌஷிக், உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகராட்சி மற்றும் சிஎம்டிஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

## காவல்துறை சார்பில் - ரூ.12 கோடியில்

# பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய 80 இளஞ்சிவப்பு வாகனச் சேவைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, நவ.12-**

**காவல்துறை சார்பில் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக மாநகரங்களின் பயன்பாட்டிற்காக ரூ.12 கோடி செலவில் 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்களின் சேவைகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2025) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக, மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 12 கோடி ரூபாய் செலவில் 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்டுதல், பாதுகாப்பு பணிகளுக்காக வாகனங்களை கொள்முதல் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்போன்றபல்வேறுதிட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், 2025 2026ஆம் ஆண்டு காவல்துறை மானியக் கோரிக்கையில், பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள் 12 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, அவ்வாகனங்களின் பயன்பாட்டினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள், தாம்பரம், ஆவடி, சேலம், கோயம்புத்தூர், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை மாநகரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ரோந்து பணி மேற்கொண்டுபெண்களின்பாதுகாப்பை உறுதி செய்வதில் தனிக்கவனம் செலுத்த ஈடுபடுத்தப்படும்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குனர்/படைத்தலைவர் க. வெங்கடராமன், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட திருநின்றவூர் நகராட்சி 24,25, ஆகிய வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு முகாமினை துவக்கி வைத்து மனுக்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொண்ட பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் நகராட்சி மன்ற தலைவர் உஷாராணி ரவி நகராட்சி ஆணையர் ஜீவிதா திருநின்றியூர் நகர செயலாளர் தி.வை.இரவி, நகராட்சி பொறியாளர் குமார் மாநில மாவட்ட நிர்வாகிகள் உள்பட அரசுத்துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் மாவட்டம் - திருநின்றவூரில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

*திருவள்ளூர் நவ. 12*

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட திருநின்றவூர் நகராட்சி 24,25, ஆகிய வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது தமிழ் நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைத்து இந்த முகாமில் பொதுப் பணித் துறை, மின்சார துறை, வருவாய் துறை என பல துறைகள் இடம் பெற்றிருந்தன. இதில் இருவருக்கு ஆதார் பெயர் திருத்தம் விண்ணப்பித்தவுடன். ஆதார் பெயர் திருத்தம் செய்யப்பட்டு உடனடியாக வழங்கப்பட்டது. மேலும் சொத்து வரி பெயர் மாற்றம் செய்த நபருக்கு உடனடியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு வழங்கினார்.

அப்போது பேசிய அமைச்சர் அரசு சேவைகளை பொது மக்களுக்கு மிகவிரைவாகவும் எளிதாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் கொண்டு சேர்ப்பதற்காக “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அற்புதமான திட்டத்தை தொடங்கி வைத்தார் இதில் ஆதார் கார்டு புதுப்பித்தல் சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரி மைத் தொகை திட்டத்தில் தகுதிவாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கப் பட்டு வருகிறது இது போன்ற எண்ணற்ற திட்டங்களை பொதுமக்கள் பயன்பெறு வகையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து அதனை சிறப்பான முறையில் செயல் படுத்திக் கொண்டிருக்கிறார்.

இது போன்ற திட்டங்களை இந்தியாவில் உள்ள முதலமைச்சர்கள் பொறாமைப்படும் அளவிற்கு பெருமைப்படும் அளவிற்குக் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் தமிழ்நாட்டு மக்களை கண் இமயம் போல் காக்கும் ஒரே தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தான் என அமைச்சர் தெரிவித்தார்.

இதில் நகராட்சி மன்ற தலைவர் உஷாராணி ரவி நகராட்சி ஆணையர் ஜீவிதா திருநின்றியூர் நகர செயலாளர் தி.வை.இரவி, நகராட்சி பொறியாளர் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஜெயபாலன், மாநகர பகுதி செயலாளர்கள் சன்.பிரகாஷ், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், நிர்வாகிகள் அன்பழகன், சி. கமலக் கண்ணன், பாபு, ஜீவானந்தம், சசிகலா ஜீவானந்தம், தி.வை.சுரேஷ்குமார், சலீம், அசோக்குமார், மு. பெ.மகேஷ் குமார், பரமசிவம், ஜெ.பிரசன்னா உள்பட அரசுத்துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

## மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் தஞ்சை வடக்கு மாவட்டம் - கும்பகோணம் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### தஞ்சை வடக்கு மாவட்டம்

### கும்பகோணம் மாநகரம்

அமைப்பாளர் - பி. கண்ணன் 77/36, சாரங்கபாணி தெற்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. கண்ணன் 31-3/16பி, பாணாதுறை கீழ வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) எ. பாலாஜி 16சி, சர்வாண்ய கீழத் தெரு, மேலக்காவேரி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) எம். சண்முகம் பிளாட் எண். 10, சோழன் நகர், மேலக்காவேரி, தஞ்சாவூர் மாவட்டம். 4) எஸ். ராம்குமார் 90ஏ, 3வது கிராஸ் விரிவு, ஸ்ரீநகர் குடியிருப்பு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்" சென்னை - 18
நாள்- 11-11-2025.

**தயாநிதி மாறன், எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 265 வது நாள்!

## வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, நவ.12-*

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 265 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (11.11.2025), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 95, வில்லிவாக்கம், 2) வட்டம் 95 அ, எம்பார் நாயுடு 2வது தெரு, வட்ட செயலாளர், பா. ஜானிசென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ் நாட்டு நலன்களையும், எதிர் காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ் நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ. ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன். எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி. சேகர், ஆர்.தீனதயாளன், க. சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ. முருகேசன், ப.லோகுபாபு, K.S.பாபு எ.வேதா, சீ.வீக்னேஷ், ச.மனோகரன், கே. பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P. விஜயகுமார், ம.அசோக்கு மார், L.சம்பத்கு மார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று வெலிங்டன் நீர்த்தேக்கத்தின் கரை மற்றும் பிரதான கால்வாயினை ரூ. 1 கோடியே 30. லட்சம் மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தும் பணிகளை தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்ய செந்தில் குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், திட்டக்குடி நகர கழக செயலாளர் வி.பி.பி.பரமகுரு மங்களூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பட்டூர் வீர. அமிர்தலிங்கம்,விருத்தாசலம் தெற்கு ஒன்றிய செயலாளர் தி. வேல்முருகன் பெண்ணாடம் நகர கழக செயலாளர் குமரவேல் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே. என்.டி.சங்கர், மருவத்தூர் ஜெயராமன், தொளார் இராஜேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## வடக்கு மண்டல பொறுப்பாளர் - எ.வ.வேலு தலைமையில் - தருமபுரியில் நாளை

# வாக்குச்சாவடி முகவர்களுக்கு “சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த (S.I.R) பயிற்சிக் கூட்டம்”!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!



*தருமபுரி, நவ. 11-*

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், வடக்கு மண்டல பொறுப்பாளர், பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களின் தலைமையில் தருமபுரி மாவட்டத்திற்கு உட்பட்ட ஐந்து சட்டமன்ற தொகுதியில் உள்ள தேர்தல் பணிக் குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) ஆகியோர்களுக்கான சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த (S.I.R) பயிற்சி கூட்டம் நாளை (13.11.2025 வியாழக்கிழமை) காலை 9.00 மணியளவில் அரூர், N.N மஹாலில் பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் பயிற்சி வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதுசமயம் தருமபுரி மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பாப்பிரெட்டிப் பட்டி, பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள், பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) அனைவரும் தவறாமல் கலந்துக்கொண்டு பயிற்சி பெற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (11.11.2025) சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில், கலை பண்பாட்டுத் துறையின் தமிழ்நாடு அரசு இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தில், 2024-2025ஆம் கல்வியாண்டில் நாட்டுப்புறக் கலையில் பகுதி நேர ஓராண்டு சான்றிதழ் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் எல்லாபுரம் தெற்கு ஒன்றிய கன்னிகைப்பேர் ஊராட்சி சிஎஸ்சி துவக்க பள்ளியில் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தமது சொந்த செலவில் சமையலறை கட்டிடத்தை கட்டி திறந்து வைத்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்பு வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் ஆ.சத்தியவேலு, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெ.அன்புவாணன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆ.ராஜா, ஞாயிறு வே.ஆனந்த் குமார், டி.கே.முனிவேல், வெங்கடாசலம், உதயகுமார், ராஜேஸ்வரி பாஸ்கர், அன்பு, சுரேஷ், சம்பத், அமீர், பொன்னேரி மா.தீபன், ஜி.டி.எம். கார்த்திக், மற்றும் ஆசிரியர்கள் நிர்வாகிகள் மாணவர்கள் உள்ளனர்.